**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.178/2024 |
| Deposition of witness for Prosecution | : | P.W-4 |
| Name | : | குமார், வயது 39 |
| Father Name/Husband Name | : | முத்தையா |
| Village | : | துரைச்சாமியாபுரம் |
| Taluk | : | சிவகாசி |
| Calling | : | பட்டாசு தொழில் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of July 2025.

**(Accused Present).**

**<u>முதல் விசாரணை</u>**

1 நான் தற்போது துரைச்சாமியாபுரத்தில் வசித்து பட்டாசு தொழிற்சாலையில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எனது ஊர்காரர். 30.09.2023 அன்று இரவு சுமார் 11.45 மணிக்கு கோவில்பட்டி, எட்டையபுரம் ரோட்டில் உள்ள வ.உ.சி பள்ளிக்கு எதிரே உள்ள வேகத்தடையை எதிரி கவனிக்காமல் வந்து வண்டியை விட்டு விபத்து ஏற்படுத்திவிட்டார், அதில் வேன் கவிழ்ந்துவிட்டது. நான் TN 37 CH 1436 என்ற பதிவு எண் கொண்ட வண்டியின் பின்இருக்கையில் இருந்தேன். ஆஜர் எதிரிதான் வண்டியை ஓட்டினார். **(சாட்சி காயம் பட்ட இடங்களை காண்பிக்கிறார்)**எனக்கு இடது கை முழங்கையில், இடது தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. எனது மனைவி அனிதாவிற்கு தலையில் காயம் ஏற்பட்டது. எனது தயார் பஞ்சவர்னம் அந்த விபத்தில் இறந்துவிட்டார். எனது தங்கை சந்திரகலாவிற்கு இடுப்பிற்கு கீழ் காயம் ஏற்பட்டது.

2 எனது தம்பிக்கு இடது கை தோள்பட்டைக்கு கீழ் காயம் ஏற்பட்டது. எனது மருமகள் அபர்ணாவிற்கு வலது கால் தொடை எழும்பு உடைந்துவிட்டது. எனது அத்தை அண்ணபாக்கியத்திற்கு தலையில் உள்ள தோல் சதையுடன் கழந்து வந்தது. எனது தங்கை சித்ராவிற்கு இடது தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. மேலும்

மேற்படி நபர்களையும் சேர்த்து 20 பேர்களுக்கு காயம் ஏற்பட்டது. எதிரி அஜாக்கிரதையாக வேகத்தடையை கவணிக்காமல் வாகணம் ஓட்டியதால் விபத்து ஏற்பட்டது. போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

**3.** அ.சா.1 சந்திரகலா எனது சகோதரி. நாங்கள் நடந்ததாக சொல்லப்படும் விபத்திற்கு ஒரு நாள் முன்பு இரவு கிளம்பி மறுநாள் அதிகாலை திருசெந்துார் செல்வதாக திட்டம் என்றால் சரிதான், 01.10.2023 அன்று திருசெந்துார் சொல்வதாக திட்டம் செய்திருந்தோம். போலிஸார் விசாரணையில் நான் கடைசி இருக்கையில் அமர்ந்து இருந்ததாக சொன்னேன். அதனால் வாகணத்தின் முன்புறம் என்ன நடந்தது என்று என்னால் பார்க்க முடியாது என்றால் சரிதான். ஓட்டுநர் மேல்பக்கம் டிவி இருப்பதால் பயணிகளுக்கு முன்பக்கம் என்ன நடந்தது என்று தெரியாது என்றால் சரிதான். டிரைவருக்கு இடது பக்கம் முன் பக்கத்தில் எனது தம்பி கார்த்திக்குமார் அமர்ந்திருந்தார், அவரிடம் போலிஸார் புகார் பெறவில்லை. சம்பவம் நடந்தது நடு இரவாகும். அதனால் பாதி பேர் துாக்க கலக்கத்தில் இருந்தார்கள் என்றும், மீதி பேர் துாங்கி கொண்டிருந்தார்கள் என்றும் சொன்னால் சரியல்ல.

4. சம்பவ இடத்தை சுற்றி ஒரு பக்கத்தில் பள்ளியும், மத்த பக்கத்தில் என்ன இருந்தது என்று நான் கவணிகவில்லை. சம்பவ இடத்திற்கு எந்த திசையில் வ.உ.சிதம்பரனார் பள்ளி இருந்தது என்றால் எனக்கு தெரியாது. வண்டி கவிழ்ந்து விழுந்ததாக சொல்லப்படும் இடத்தில் இருந்து எவ்வளவு துாரத்தில் வேகத்தடை இருந்தது என்றால் எனக்கு தெரியாது. வேகத்தடைக்கு முன்பு வேகத்தடை அறிவிப்பு போர்டு இருந்ததா என்று நான் கவணிக்கவில்லை. வேகத்தடையில் கருப்பு வெள்ளை பெயிண்ட் அடிக்கப்பட்டிருந்ததா என்றும், புதிய வேகத்தடையா என்றும் நான் கவணிக்கவில்லை என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் விபத்து நடக்கவில்லை என்றாலும், அரசு தரப்பிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரியால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand
Judicial Magistrate No.I,
Kovilpatti.